செ.வெ.எண்.59 நாள்:24.08.2020

## நீலகிரி மாவட்டத்தில் முதன்மை செயலாளர் / தலைமைச் செயல் அலுவலர் இன்கோசர்வ், மாவட்ட கண்காணிப்பு அலுவலர் திருமதி.சுப்ரியாசாஹூ இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஜெ.இன்னசென்ட் திவ்யா இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில் கொரோனா தொற்று நோய் தடுப்பு பணிகள் குறித்து சுகாதாரத்துறை அலுவலர்களுடனான ஆலோசனை கூட்டம் நடைபெற்றது.

---

நீலகிரி மாவட்டம் குன்னூர் இன்கோசர்வ் அலுவலகத்தில் முதன்மை செயலாளர் / தலைமைச் செயல் அலுவலர் இன்கோசர்வ், மாவட்ட கண்காணிப்பு அலுவலர் திருமதி.சுப்ரியாசாஹூ இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஜெ.இன்னசென்ட் திவ்யா இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில் கொரோனா தொற்று நோய் தடுப்பு பணிகள் குறித்து சுகாதாரத்துறை அலுவலர்களுடனான ஆலோசனை கூட்டம் இன்று (24.08.2020) நடைபெற்றது.

இக்கூட்டத்தில் முதன்மை செயலாளர்/ தலைமைச் செயல் அலுவலர் இன்கோசர்வ், மாவட்ட கண்காணிப்பு அலுவலர் திருமதி.சுப்ரியாசாஹூ இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது:-

நீலகிரி மாவட்டத்தில் தமிழக அரசின் உத்தரவின்படி, கொரோனா தொற்று நோய் தடுப்பு பணிகள் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் மாவட்டத்திலுள்ள அரசு மருத்துவமனைகள் மற்றும் தனியார் மருத்துவமனைகளில் கொரோனா தொற்று நோயினால் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு சிகிச்சை அளிக்க ஏதுவாக படுக்கையறை வசதிகள் அதிகரிக்கப்பட வேண்டும். மேலும் தொற்று நோயினால் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு அரசு தெரிவித்துள்ள வழிமுறைகளின்படி சிகிச்சைகளை அளிக்க வேண்டும். கொரோனா தொற்று நோயினால் பாதிக்கப்பட்ட நபர்களின் விவரங்களை முழுமையாக சேகரித்து, அவர்களுடன் தொடர்புடைய முதல்நிலை மற்றும் இரண்டாம் நிலை நபர்களை கண்டறிந்து கொரோனா தொற்று நோய் அறிகுறி இருக்கும் பட்சத்தில் அவர்களையும் பரிசோதனை மேற்கொள்ள வேண்டும்.

கோவிட் கேர் சென்டர் அதிகரிப்பது மற்றும் படுக்கை வசதிகள் அதிகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். கொரோனா தொற்று நோயினால் பாதிக்கப்பட்ட நபர்கள் உள்ள பகுதிகளில் காய்ச்சல் கண்டறியும் மருத்துவ முகாம்கள் நடத்த வேண்டும். அனைத்து அரசு மருத்துவமனை, ஆரம்ப சுகாதார நிலையங்களில் காய்ச்சல் அறிகுறிகளுடன் நபர்கள் வந்தால் அவர்களின் முழு முகவரிகளை சேகரித்து அந்த பகுதிகளில் காய்ச்சல் மருத்துவ முகாம் நடத்திட நடவடிக்கை எடுத்திட வேண்டும்.. மேலும் தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகளில் உள்ளவர்களுக்கு தினந்தோறும் கபசுர குடிநீர், ஜிங்க் மாத்திரைகள், ஆர்சனிக் ஆல்பம் மாத்திரை ஆகியவற்றை தவறாமல் வழங்கிட வேண்டும் என முதன்மை செயலாளர்/ தலைமைச் செயல் அலுவலர் இன்கோசர்வ், மாவட்ட கண்காணிப்பு அலுவலர் அவர்கள் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஜெ.இன்னசென்ட் திவ்யா இ.ஆ.ப.. அவர்கள் தெரிவித்ததாவது:-

கொரோனா தொற்று நோயினால் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு அரசு தெரிவித்துள்ளபடி முறையாக சிகிச்சை அளிப்பதோடு அவர்களின் உடல் நலம் தொடர்ந்து கண்காணிக்கப்பட வேண்டும். மேலும் நோய் கட்டுப்பாட்டு பகுதியில் உள்ள பொதுமக்களுக்கு சளி, காய்ச்சல், இருமல் போன்ற அறிகுறிகள் தென்பட்டால் அவர்களுக்கு மருத்துவ பரிசோதனை மேற்கொள்ள வேண்டும். நோய் கட்டுப்பாட்டு பகுதியில் தொடர்ந்து பத்து நாட்களுக்கு காய்ச்சல் கண்டறியும் மருத்துவ முகாம் நடத்திட வேண்டும். கொரோனா தொற்று நோயிலிருந்து பொதுமக்கள் பாதுகாப்பாக இருப்பதற்காக முக கவசங்கள் அணிவது, அடிக்கடி கை கழுவுவது தொடர்பாக விழிப்புணர்வு ஏற்படுத்திட வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் இணை இயக்குநர் (மருத்துவ நலப்பணிகள் மரு.பழனிச்சாமி, அரசு மருத்துவமனை முதல்வர் மரு.ரவீந்திரன், துணை இயக்குநர் (சுகாதார பணிகள்) மரு.பாலுசாமி, அரசு மருத்துவமனை கண்காணிப்பாளர் மரு.சிரியான் ரவிக்குமார் மற்றும் சுகாதாரத்துறை அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்-

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நீலகிரி மாவட்டம்.